<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 57/2021**

2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியாகிய **<u>ரெங்கராஜன் PW. 1</u>** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 02.09.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ரெங்கராஜன் | | |
| Father Name | : | பத்மநாபன் | Court | : |
| Village | : | தில்லையாடி. | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 75 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

16.04.1970 தேதியிட்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.03.1986 தேதியில் சுசீலாதேவி அவர்களுக்கு அகோரம் அய்யர் அவர்கள் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**ஆக குறியீடு செய்யப்படுகிறது, 31.03.1986 ஆம் தேதி சுசீலாதேவி என்பவருக்கு அகோரம் அய்யர் எழுதிக்கொடுத்த பகுதி Madeoverபத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது, 15.10.2013 தேதியில் வாதி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான

ஒப்புகை அஞ்சல் அட்டை அசல் **வா.சா.ஆ5.** ஆக குறியீடு செய்யப்படுகிறது, 1ம் பிரதிவாதி அவர்களின் வழக்கறிஞர் மூலம் வாதியின் வழக்கறிஞருக்கு கொடுத்த பதிலறிவிப்பு மற்றும் காசோலை அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.